புதுச்சேரி அரசு
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திர தின விழாவின்போது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சுற்றுச்சூழலை பேணுவதிலும், அது தொடர்பான பணிகளிலும் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றிய பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகிய ஒன்றிற்கு 'சுற்றுச்சூழல் விருது' ஒன்றினை அளிக்க முடிவு செய்திருக்கிறது. 2013-2015 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் விருது பெறுவோரை தேர்வு செய்வதற்காக பொதுமக்கள்/ நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து முன்மொழிவுகள், பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதி:**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க சாதனை படைத்த, தகுதியுள்ள பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றிற்கு இவ் விருதினை பெறும் தகுதி உண்டு. வயதுவரம்பு ஏதுமில்லை. பின்வரும் பட்டியல், அப்பணிக்குரிய களங்களை எடுத்துக்காட்டுவதாகும். இந்தப்பட்டியல் முழுமையானதன்று.

அ) மாசு அடைதலைக் கட்டுப்படுத்துதல்

ஆ) இயற்கை வளங்கள் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்

இ) புதுமையான தூய்மை தொழில்நுட்பம் மற்றும் குப்பை மேலாண்மை ஆகியன நடைமுறை படுத்தியிருத்தல்

ஈ) ஆற்றல் மற்றும் நீர் வளங்கள் பாதுகாத்தல்

உ) மரம் வளர்த்தல்

ஊ) பருவநிலை மாற்றம் சம்மந்தமான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்

விருதுக்குரிய அடிப்படை:

சுற்றுச்சூழல் விருதுக்கு உரியவர் தேர்வானது சுற்றுச்சூழல் களப்பணியாற்றியவரின் பணித்தகுதிகள், அவர்தம் பணிகளின் இயல்பு ஆகியவை சிறப்பாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கனவே செய்த பணியில் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் களத்தில் அதன் செல்வாக்கும் தேர்வுக்கு சிறப்பான அடிப்படையாகக் கொள்ளப்படும்.

மேற்கூறிய அடிப்படைகளை உடைய பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைபப்புகள கீழே கேட்கப்பட்டுள்ள முழு விபரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு தங்கள் விண்ணப்பங்களை (3 பிரதிகள்) இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, 3-வது மாடி, வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி – 605 005 என்ற முகவரிக்கு 24.06.2016 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய விண்ணப்பதாரரின் விண்ணப்பம் 3 பிரதிகள் எடுத்து அனுப்புதல் வேண்டும். இது விண்ணப்பதாரரின் அடையாளத்தையும், அவரால் நிறைவேற்றப்பட்ட பணியையும், தேவையான சான்றுகளையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

இயக்குநர்
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

விண்ணப்பப்படிவம்

1. பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் பெயரும், முகவரியும்
2. 2013-2016 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் வகை.
3. அமைப்பு / நபர், சாதிச்சங்கங்களுடன் தொடர்பு கொண்டவரா அல்லது ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபடுபவரா?
4. குடியுரிமை (தனிப்பட்டவராயிருந்தால்)
5. பதிவெண்ணும், தேதியும் (நிறுவனமாக இருந்தால்)
6. நிறுவன / அமைப்பில் பொறுப்பாளரின் பெயர், இடம், எய்திய இலக்குகள், பணிக்காலம்.
7. பணியேற்பின் இயல்பும், விளைவுகளின் தன்மை, அளவுகள் பற்றிய மதிப்பீடு
8. சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், பாதுகாத்தல்களில் செய்த பங்கு பணிகள் (குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள், சான்றுகள்)
9. இது தொடர்பான உபயோகமான இன்னும் பிற தகவல்கள்.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள், என் அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்று உறுதி செய்கிறேன்.

ஒப்பம்